# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2014 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, சித்தசுவாதீனம் குறைந்த பிள்ளைகளுக்கான பாடசாலையின் நலன்புரிச் சங்கம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டம்

---

*(2014 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 24 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---


*2014, நவெம்பர் மாதம் 28 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 5.00** **தபாற் செலவு : ரூபா 20.00**

**2014 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, சித்தசுவாதீனம் குறைந்த பிள்ளைகளுக்கான பாடசாலையின் நலன்புரிச் சங்கம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டம்**

[*2014 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 24 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.*]

*ச.வ.ஓ.(கூட்டி.) 19/2013*

**1988 ஆம் ஆண்டின் 75 ஆம் இலக்க, சித்தசுவாதீனம் குறைந்த பிள்ளைகளுக்கான பாடசாலையின் நலன்புரிச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

*சித்தசுவாதீனம் குறைந்த பிள்ளைகளுக்கான பாடசாலையின் நலன்புரிச் சங்கம், 1988 ஆம் ஆண்டின் 75 ஆம் இலக்க, சித்த சுவாதீனம் குறைந்த பிள்ளைகளுக்கான பாடசாலையின் நலன்புரிச் சங்கச் சட்டத்தினால் கூட்டிணைக்கப்பட்டதாதலாலும்:* முன்னுரை.

*அத்துடன் சித்தசுவாதீனம் குறைந்த பிள்ளைகளுக்கான பாடசாலையின் நலன்புரிச் சங்கம், ''சித்திரா லேன் விசேட தேவைகளுள்ள பிள்ளைகளுக்கான நலன்புரிச் சங்கம்'' என்பதாக அதன் பெயரை மாற்றுவதற்கு இப்போது விரும்புகின்றதாதலாலும் :*

*அத்துடன் சொல்லப்பட்ட சித்தசுவாதீனம் குறைந்த பிள்ளைகளுக்கான பாடசாலையின் நலன்புரிச் சங்கம், அதன் பெயரிலான அத்தகைய மாற்றத்துக்குப் பயன்கொடுப்பதற்குச் சொல்லப்பட்ட சட்டத்தைத் திருத்துவதற்கு இப்போது விண்ணப்பித்துள்ளதாதலாலும், அத்தகைய விண்ணப்பத்தை அனுமதித்தல் உசிதமானதாகவிருக்குமாதலாலும் :*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-*

**1.** *இச்சட்டம், 2014 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, சித்தசுவாதீனம் குறைந்த பிள்ளைகளுக்கான பாடசாலையின் நலன்புரிச் சங்கம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.* சுருக்கப் பெயர்.

2-PL 007247 -775 (2013/05)

*1988 ஆம் ஆண்டின் 75 ஆம் இலக்க, சித்தசுவாதீனம் குறைந்த பிள்ளைகளுக்கான பாடசாலையின் நலன்புரிச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டத்துக்கான பொதுவான திருத்தம்.*

**2.** அதன் விரிவுப்பெயர் தவிர்ந்த, 1988 ஆம் ஆண்டின் 75 ஆம் இலக்க, சித்தசுவாதீனம் குறைந்த பிள்ளைகளுக்கான பாடசாலையின் நலன்புரிச் சங்கச் சட்டத்தில் (இதனகத்துப் பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) அதன்கீழ் ஆக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட ஏதேனும் விதியில், அறிவித்தலில் அல்லது வேறு ஆவணத்தில் சித்தசுவாதீனம் குறைந்த பிள்ளைகளுக்கான பாடசாலையின் நலன்புரிச் சங்கம், அப்பெயரினாலாயினுஞ்சரி அல்லது ''சித்தசுவாதீனம் குறைந்த பிள்ளைகளுக்கான பாடசாலையின் நலன்புரிச் சங்கத்தின்'' சுருக்கீட்டினாலாயினுஞ் சரி, குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய, ''சித்தசுவாதீனம் குறைந்த பிள்ளைகளுக்கான பாடசாலையின் நலன்புரிச் சங்கம்'' என்ற சொற்களுக்குப் பதிலாக, ''சித்திரா லேன் விசேட தேவைகளுள்ள பிள்ளைகளுக்கான நலன்புரிச் சங்கம்'' என்னும் சொற்கள் இடப்படுதல் வேண்டும்.

*ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகள், வழக்குகள், மேன்முறையீடுகள், உரிமைகள், பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் தொடர்ந்திருத்தல்.*

**3.** (1) ''சித்தசுவாதீனம் குறைந்த பிள்ளைகளுக்கான பாடசாலையின் நலன்புரிச் சங்கத்தினால்'' அல்லது அதன் சார்பில் இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னர் செய்யப்பட்ட, வழங்கப்பட்ட அல்லது எழுதி நிறைவேற்றப்பட்ட எத்தகையனவுமான எல்லா ஒப்பந்தங்களும், உடன்படிக்கைகளும், சான்றிதழ்களும் அல்லது வேறு சாசனங்களும் அல்லது ஆவணங்களும், இச்சட்டம் தொடங்கும் தேதியன்றும் அதன் பின்னரும் ''சித்திரா லேன் விசேட தேவைகளுள்ள பிள்ளைகளுக்கான நலன்புரிச் சங்கத்தினால்'' அல்லது அதன் சார்பில் செய்யப்படுகின்றனவாகவும், வழங்கப்படுகின்றனவாகவும் அல்லது எழுதி நிறைவேற்றப்படுகின்றனவாகவும் மற்றும் செய்யப்பட்டுள்ளனவாகவும், வழங்கப்பட்டுள்ளனவாகவும் அல்லது எழுதி நிறைவேற்றப்பட்டுள்ளனவாகவும் கருதப்படுதல் வேண்டும்.

(2) ''சித்தசுவாதீனம் குறைந்த பிள்ளைகளுக்கான பாடசாலையின் நலன்புரிச் சங்கத்தினால்'' அல்லது அதற்கெதிராகத் தொடுக்கப்பட்டவையும், இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று முடிவுறாதுள்ளவையுமான எல்லாத் துடர்ச்சிகளும், வழக்குகளும், மேன்முறையீடுகளும் மற்றும் வேறு

சட்ட நடவடிக்கைகளும் தணிந்து போதலோ அல்லது நிறுத்தப்படுதலோ ஆகாதென்பதுடன், ''சித்திரா லேன் விசேட தேவைகளுள்ள பிள்ளைகளுக்கான நலன்புரிச் சங்கத்தினால்'' அல்லது அதற்கெதிராகத் தொடர்ந்து நடாத்தவும்படலாம் அல்லது வலுவுறுத்தவும்படலாம்.

(3) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று உளதாயிருக்கின்ற (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட உரிமைகளும் பொறுப்புகளும் கடப்பாடுகளும் தவிர்ந்த “சித்தசுவாதீனம் குறைந்த பிள்ளைகளுக்கான பாடசாலையின் நலன்புரிச் சங்கத்தின்'' எல்லா உரிமைகளும், பொறுப்புக்களும், கடப்பாடுகளும் ''சித்திரா லேன் விசேட தேவைகளுள்ள பிள்ளைகளுக்கான நலன்புரிச் சங்கத்தின்'' உரிமைகளாகவும், பொறுப்புக்களாகவும், கடப்பாடுகளாகவும் கருதப்படுதல் வேண்டும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில், “ஐந்து ஆண்டுகளுக்குக் குறையாத உறுப்பாண்மையை'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, “இரண்டு ஆண்டுகளுக்குக் குறையாத உறுப்பாண்மையை'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும் :-

''(3அ) நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சபையிலான உறுப்பினர்களின் ஆகக்கூடிய எண்ணிக்கை பத்து ஆதல் வேண்டும் .''.

ஐயங்களைத் தவிர்த்தல்.

**5**. ஏதேனும் ஐயத்தை தவிர்க்கும் நோக்கத்துக்காக “சித்திரா லேன் விசேட தேவைகளுள்ள பிள்ளைகளுக்கான நலன்புரிச் சங்கமானது'' எல்லா நோக்கங்களுக்காகவும் முதன்மைச் சட்டவாக்

கத்தின் 2 ஆம் பிரிவினால் தாபிக்கப்பட்ட சித்த சுவாதீனம் குறைந்த பிள்ளைகளுக்கான பாடசாலையின் நலன்புரிச் சங்கத்துக்கான வழியுரிமையாளராக கருதப்படுதல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**6**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*